உ

கடவுள் துணை.

சதுரகிரிமலையிலெழுந்தருளிய

# சுந்தரமகாலிங்க

# சுவாமிபேரில் பதிகம்.

திருப்போரூர்

## டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதரூஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதரூஸ் என். சி.

1914.

கடவுள் துணை.

# சுந்தரமகாலிங்க
## சுவாமிபேரில் பதிகம்.

கருவாகி அன்னைதன் வயிற்றினி லுதித்து
கருப்பையிற் கட்டுண்டியான்
காலமது திங்களீ ரைந்துமுடிவானபின்
காசினியிலே யுதித்து
உருவாகிவந்தபின் வயதுபதி னாறுசென்
றோரறிவு கிட்டாமலே
வுட்டினிலகப்பட்ட பட்சிபோலேகவலை
யுற்றடிமை மிகமெலிந்து
சிறுவருடனேசேர்க்கை யாலுன்னைநாடாமற்
றிரிந்துவிட் டென்தெய்வமே
செனனம்வருமென்று மனம்யோசிக்குதேயென்ன
செய்குவே னென்னையாளும்
தருமகுணநீத சுந்தரமகாலிங்கமருள்
தரவேண்டு மிதுசமயமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தனமகா லிங்கமே. (க)

மூக்குநுனியென்றகுரு பீடத்தில்நித்தியமாய்
முதல்வனடி தனைவணங்கி

முன்செய்ததவபதத் தாலுநின்னருளாலும்
முக்கியமாய் மனதைநாட்டித்
தாக்கியேசிவயோக வாசிதனையூதச்
சதானந்தி விந்துவாசி
தங்குமென்றேயெங்கள் கும்பமுனிநாயனார்
தான்மொழிந் திட்டபடியால்
பார்க்கலாமென்றதின்மே லிச்சைவைத்துனது
பாதமதை யாநம்பினேன்
பரமகுருசாமியுன் னடிமையிச்சித்தத்தை
பாலித்து யெந்தனுக்குச்
சாக்கிரதையாகநின் பாக்யமாமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தனமகா லிங்கமே (உ)
பரவையதுசூழ்ந்திடுந் தரணிதனிலடிமையான்
பட்டசள மெத்தவுண்டு
பாவிமாபாவியென் போலுமிவ்வுலகினிற்
பார்க்கவே யொருவருண்டோ
நரசெனனமாகப் பிறந்துமறிவதைவிட்டு
நாய்போற் றிரிந்தலைந்தேன்
காய்க்குமொருபுகழுண் டெனக்குமப்புகழில்லை
நாயினுங் கடைகெட்டநான்
துரையானமூலநடுவணைமீதி லெப்பவுஞ்
சோதியாய் நின்றிலங்குஞ்

சொரூபமேமுத்திதரு மரூபமேநின்பதந்
துணையென்று உனையடைந்தேன்
சரமாறிவருகின்ற நிலையறியமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தனமகா லிங்கமே. (௩)
பரியாசமாகஇவ் வுலகோர்நகைத்தெனை
பாவியென் றேசினாலும்
பண்டூழ்வினையது தொடர்ந்தெனைபற்றியே
பங்கப் படுத்தினாலும்
மரியாதையில்லாம லன்னைசுற்றத்தார்கள்
வைதாலு மடையனென்றும்
வாராததுன்பங்கள் வந்தாலுமென்கர்ம
வசமென்று மசைவின்றியே
குறியாயிருப்பதற் கேமமொடுநேமமுங்
கூறவரி தானதசமுங்
கூறியெனை யாட்கொள்ள வேணுமென்றேயிருகை
கூப்பியுனை வந்தடைந்தேன்
சரியாமெனக்குன் றனையறியமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தன மகா லிங்கமே. (௪)
ஈயெறும்பானைமுத லெண்பத்துநான்குநூ
றுயிரஞ் சீவவுயிரும்

இனமெலாமொன் றுகுறை யாமலேதனதாக
 எல்லாம் பிறந்திறந்து
தேய்வாகும்பிறைபோலத் தேய்ந்தபின்மேலான
 செனனமெனு மானிடமதாய்ச்
சென்மித்து அதனிலும் பெண்செனனம்நீக்கியான்
 செனனமது வாய்ப்பிறந்து
தீய்வானகூன்குருடு நீக்கியறிவாகநின்
 செயலெனும் அருளினாலே
சென்மித்த அடிமைதனை வன்மித்திராமலென்
 செனனமது ஈடேறவே
தாய்போலெனக்குநீ தயவாகமோனமருள்
 தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
 சந்தனமகா லிங்கமே. (ரு)
கருவிகரணாதியை யகற்றிமுன்செய்ததவ
 கர்மந் தனை துரத்திக்
கால்கொண்டுவாசியை மேல்கொண்டெழுப்பியே
 கடிவாள மங்கிபூட்டிப்
புருவநடுமத்தியிற் பருதிமதியொத்துப்
 பொருந்தவே யொன்றுசேர்த்து
போகின்றநாற்கலைபாழ் போகாமலெப்பவும்
 பூரணமா யுள்ளிருததி
இருவினையகற்றவே மனநடுநிருத்தியே
 எம்பிரா னின்னருளினால்

இருபத்தோராயிரத் தறுநூறுதன்னையும்
ஏகவெளி தன்னிலேத்த
சருவபரிபூரணச் சுந்தரனேமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தனமகா லிங்கமே. (சு)
ஆதாரமாறினி லமைத்த அச்சரமதனை
யன்புகூர்ந் தருள்புரியவும்
அம்பரமதானபர வெளியிலோரச்சரத்
தருமைதனை யருள்புரியவும்
வாதாகயென்னிடம் வழக்காடுகருவிதனை
மாட்டுதற் கருள்புரியவும்
மதிபெருகுமஷ்டாங்க மார்க்கமதுசித்திக்க
மௌனநிலை யருள்புரியவும்
வேதாவிதித்தவிதி தன்னைக்கடந்திடவு
மெஞ்ஞான மருள்புரியவும்
வேண்டினேனின்னடிமை யாண்டுபணிரெண்டு
மெய்யடிதொழுது கதியடையவே
காதாயெனக்குநின் பாதமெனுமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தனமகா லிங்கமே. (எ)
வஞ்சகமன் றனக் கஞ்சாதிருக்கநடு
வணைவன்னி யருள்புரியவும

வல்லபைகணேசன்வளர் பதியில்நாலிதளுடைய
மணிமந்திர மருள்புரியவும்
விஞ்சையா லுதித்தெழுந் தஞ்சாமல்வரும்வாசி
விபரமதை யருள்புரியவும்
மேலெழுந்தேமுட்டு கால்தனையெட்டினல்
வெடிகட்டி யருள்புரியவும்
பஞ்சவர்கள்பதியைக் கடந்தம்பரத்திற்
பரத்தினிலை யருள்புரியவும்
பரமகுருந தனென் பாதாரவிந்தமே
பதியாக வருள்புரியவும்
தஞ்சமெனநம்பினே னஞ்சலெனமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தன மகாலிங்கமே. (அ)

சூதுமுதலானபொய் களவுவஞ்சனைகளொடு
துற்புத்தி விட்டுவிடவும்
துர்ச்சனர்தமைக்கண்டால் நச்சரவுதானென்று
தூரத்தி லோடிவிடவும்
ஏதுயிர்களானலு மன்னுயிரேதன்னுயிரென்
றெண்ணிமெய யிரங்கிவிடவும்
இகமீதிலுள்ளபல யிச்சைதனையகமீதி
லெண்ண திருந்துவிடவும்
தீதுடையமாயகை துன்பங்களைக்கனவிலுஞ்
சேரா திருந்துவிடவும்

சிவசிவாசதுரகிரி தேசிகாநித்தமுன்
தெரிசனைகள் கண்டுகொள்ளவும்
தாதுதசவாய்வுநிலை யறியவுமோனமருள்
தரவேண்டு மிதுசமையமே
தங்குசதுரங்கிரியி லங்கிவளர் துங்கமே
சந்தன மகாலிங்கமே. (சு)

ஆதியாம்பிர்மமொடு சத்திசிவம்வாழிவல்
லபையொடு கணேசன்வாழி
அரிஅயன்வாழி லெட்சுமிவாழிசரஸ்பதி
யம்மைபொன் னடியும்வாழி
நீதிகுருவாழியென் சுந்தரமகாலிங்கம்
நேயமாய் நாளும்வாழி
நித்தியானந்தபதி னெண்பேர்கள்வாழிநன்
னிலையான சித்தாவாழி
வேதம் நால்வாழி யூராறுசாஸ்திரம்வாழி
மிக்காக மங்கள்வாழி
வியாசனொடுசத்தரிஷி வால்மீகர்சுகர்சூதர்
விஞ்சை முனிவோரும்வாழி
மாதவர்கள்வாழி சிவனடியார்த போதனர்கள்
மாமலர்த் தாளும்வாழி
மண்டுதுயரைதீர்க்க தொண்டனெனையுங்கார்க்க
வந்தருள் மகாலிங்கமே. (ம)

முற்றிற்று.